சுருக்கம்

பணியாளர் தொகுதி – ஆதிதிராவிடர் நலம் – ஆதி திராவிடர் நல இயக்ககத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்த காலஞ்சென்ற திரு. S. அறிவழகன் என்பவரின் மனைவி திருமதி. A. வசந்தி என்பவர் கருணை அடிப்படையில் தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணியில் சேர்ந்த நாளான 01.03.2016 முதல் பணி வரன்முறை செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந–1) நலத்துறை

அரசாணை (2ப) எண். 6

நாள்: 26.02.2019

திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி வருடம்
மாசித் திங்கள் 14 – ஆம் நாள்,

படிக்க:

1. அரசாணை (நிலை) எண். 100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத்துறை, நாள் 01.08.2018.
2. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடித ந.க. எண். இ3/1992/2014, நாள் 09.10.2018

-------

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடிதத்தில், பணியில் இருக்கும்போது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டத்தின்படி, ஆதி திராவிடர் நல இயக்ககத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் இருக்கும்போது 22.01.2011 அன்று காலமான திரு. எஸ். அறிவழகன் என்பவரது மனைவி திருமதி A. வசந்தி என்பவருக்கு கருணை அடிப்படையில் ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் தமிழ்நாடு மாநில சார்நிலைப் பணிவிதிகளுக்கான பொது விதிகளின் விதி 10 (அ) (i) [ தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ( பணி நிபந்தனைகள் ) சட்டம், 2016 (தமிழ்நாடு சட்டம் எண்.14/2016]–இன் பிரிவு 47(1) ]–இன் கீழ் தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, 01.03.2016 முற்பகல் முதல் பணி புரிந்து வருகிறார் எனவும் தெரிவித்து, காலஞ்சென்ற அரசு ஊழியரின் மனைவி திருமதி. A. வசந்தி ஆவார், என வட்டாட்சியர் சான்று வழங்கியுள்ளார் என்றும், தனியரது குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியவில்லை / காலமான அரசு ஊழியரின் குடும்பத்தினரின் பெயரில் அசையும் சொத்துக்கள் ஏதுமில்லை அசையா சொத்துக்களான ரூ.3,22,150/– (ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து நூற்றி ஐம்பது) மதிப்புடைய ஒரு ஓட்டு வீடு மட்டுமே உள்ளது என்றும், இக்குடும்பத்தின் வருட வருமானம் ஏதுமில்லை என்றும் இக்குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், காலஞ்சென்ற அரசு ஊழியரின் மனைவி திருமதி. A.வசந்தி, மறுமணம் ஏதும் செய்து கொள்ளவில்லை என்று திட்டக்குடி வட்டாட்சியர் சான்றுகள் வழங்கியுள்ளார்.

பணிநியமனம் கேட்டு விண்ணப்பித்த நாளன்று பள்ளி இடைநிலைக் கல்வி பொதுத்தேர்வில் தேர்ச்சி மற்றும் தமிழ் தட்டச்சுத் தேர்வில் இளநிலையும், ஆங்கிலம் தட்டச்சுத் தேர்வில் உயர்நிலையில் தேர்ச்சி பெற்றுள்ளார். எனவே, தனியரது தட்டச்சர் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 01.03.2016 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பிக்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, திருமதி A. வசந்தி என்பவரின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெறும் நிலை எழவில்லை.

3. இந்நிலையில், ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, ஆதி திராவிடர் நல இயக்ககத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் இருக்கும்போது 22.01.2011 அன்று காலமான திரு. S.அறிவழகன் என்பவரது மனைவி திருமதி A.வசந்தி, என்பவருக்கு கருணை அடிப்படையில் ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தில் தட்டச்சராக பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் பணியில் சேர்ந்த நாளான 01.03.2016 முற்பகல் முதல் அவரது பணியை வரன்முறை செய்திட, அவர் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அரசு முடிவெடுத்து, அதன்படி அன்னாரது பணியினை 01.03.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தகுதியுள்ள ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதும் இருப்பின் அவைகளை விதிகளின்படி பெற தனியர் தகுதி உடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் இசைவினை அதன் அ.சா.எண். 538/T1/19-1, நாள் 19.02.2019–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் சென்னை–5.
திருமதி. A. வசந்தி, தட்டச்சர்
ஆதிதிராவிடர் நல இயக்ககம், சென்னை–5.
(ஆதிதிராவிடர் நல ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–8 (கிழக்கு)
முதன்மை மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை - 6/18/35

<u>நகல்</u>
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கூடுதல் தலைமைச் செயலாரின் நேர்முக உதவியாளர், சென்னை- 9.
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை, சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (T1) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்